12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
அவர்கள் அருளியது

# சித்தர் இராமாயணம் - IV

# மெய்யான இராமன் வரலாறு



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 **பங்குனி** மாதம்.

காணிக்கை: ரூ 10/-

# <u>உள்ளுறை</u>

## 1. சித்தர் இராமாயணம் - ஆறும் பாகம்.

### <u>சித்தர் இராமாயணம் தொடர் கட்டுரை (முன்னுரை)</u>

இன்றைக்கு சித்தர் இராமாயணம் என்ற தலைப்பில் "ஆய்வுக் கட்டுரைகள்" எழுத நேரிட்டுள்ள அவசிய அவசரத் தேவை நிலைகளைச் சுருக்கமாக குறிக்கிறோம் யாம்.

யாம் <u>முழுமையாக மீண்டும் இராமாயணக் கதையை எழுத முன்வரவில்லை</u>. இன்றைக்கு நாட்டு நடப்பில் வால்மீகி, போதாயனர், துளசிதாசர், நாரதர், கம்பர், புலவர் குழந்தை..... முதலியோர் எழுதிய இராமாயணங்களே பெரும்பாலும் படிக்கப்பட்டும், பேசப்பட்டும் வருகின்றன. ஆனால், இவைகளுக்கெல்லாம் ஆரம்பமாக, மூலமாக, முதலாக, முதலாவதாக, துவக்கமாக, கருவாக, தாயாக, பதினெண்சித்தர்களின் 'இராமாயணம்', 'இராமகாதை', 'இராவணகாதை', 'மண்டோதரி வாக்கு(சாபம்)', 'ஞான வாசிட்டம்' அல்லது 'வசிட்டர் காதை', 'இராவணன் நீதி', 'சீதை நீதி', 'விசுவாமித்திரர் நீதி', 'சனகர் அறம்', 'தசரதன் அறம்', 'இராவணன் அறம்', 'வால்மீகி ஞானம்', 'விசுவாமித்திரர் ஞானம்', 'வசிட்டர் ஞானம்', 'சனகர் ஞானம்', 'இராவணன் ஞானம்', 'சீதை ஞானம்', 'மண்டோதரி புலம்பல்', 'இராமன் புலம்பல்', 'சீதை புலம்பல்'..... என்று பெயரிடப்பட்டுக் குறிக்கப்படும் (60) அறுபது நூல்கள் [தமிழில்] இருக்கின்றன. இவற்றின் அடிப்படையில்தான் பிற்காலத்தே பலரும் இராமாயணத்தைக் கதைகளாக, கவிதைகளாக, காவியங்களாக எழுதினர்.

**- ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.**

# சித்தர் இராமாயணம்

# யக்ஞவல்லியின் இராமாயணம்

# மெய்யான இராமன் வரலாறு

## ஆறும் பாகம்

(1) திரேதகா யுகத்தில் சூரியகுலத்தைச் சார்ந்த மன்னர்களும், மகான்களும், ஞானியர்களும், முனிவர்களும், மாவீரர்களும், அருளாளர்களும், கொடை வள்ளல்களும் எண்ணற்றுத் திகழ்ந்தனர். அதாவது 12,90,000 ஆண்டுகளுக்குரிய மிகப் பெரிய இடைவெளியில் ஆயிரமாயிரம் அரசர்களும், கணக்கற்ற போர்களும் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால், அயோத்தி மன்னன் தசரதனின் மகன் இராமன் நிகழ்த்திய இராவணப் போரும்[18 மாதங்கள்], இவனது மகன்கள் இலவகுசர்கள் இவனைத் தங்களுடைய தந்தை என்றும் பாராமல் இருவரும் தொடர்ந்து 48 மாதங்கள் நிகழ்த்திய போரும் இறவாத இலக்கியச் சிறப்பையும், வாழ்வையும் பெற்று விட்டன.

இவர்கள் காலத்திலே வாழ்ந்த சூரியகுலத்து குரு 'சூரியனர்' எனப்படும் யக்ஞவல்லி அருளுலகில் சிறந்து; மாந்தரீக வல்லியாக, தாந்தரீகச் சித்தியாளராக, யக்ஞவல்லியாக, யோகீசுவரராக விளங்கிப் பரந்துபட்ட அரச குடும்பங்கள், செல்வர்கள், அருளாளர்கள்..... முதலிய அனைவருக்கும் தலைவராக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக விளங்கினர். அப்படிப்பட்ட அவர் தன்னோடு தொடர்பு கொண்டிருந்த பதினெட்டு வால்மீகிகளையும், பதினெட்டுக்

கம்பர்களேயும் 27 வண்ணங்களில் இராமாயணத்தை இலக்கியங்களாகப் படைக்கச் செய்தார். வாழையடி வாழையாக நாரதர், பிறமண், ஆதிகவி வால்மீகிகள், கம்பர்கள், காளிதாசன், துளசிதாசர், வாத்சாயனர், புத்தர், மகாவீரர், நாயனுர்கள், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள், பல மொழியினர் இந்த இராமாயணத்தை மீண்டும் மீண்டும் தங்கள் ஆர்வத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்ப புதிய புதிய இலக்கியங்களாக எழுதி மகிழும்படிச் செய்தனர். ஆனுல், இவர் இராமாயண காலத்தில் வாழ்ந்த அனேவர் பற்றியும், சிறப்புமிக்க நிகழ்ச்சி பற்றியும் எழுதிச் சென்றிட்ட குறிப்புக்கள் தனித்து நின்றுவிட்டன.

எனவேதான், மெய்யான இராமன் வரலாறும், திரேதகா யுகத்தின் நாயகர் நாயகிகளின் வரலாறுகளும் மிகுந்த கற்பனேயும், கனவுப் போக்கும், கதைநோக்கும், இலக்கியப் பண்பும் மிகுந்தவைகளாகி விட்டன. அதனுல்தான், பதினெண்சித்தர் பீடாதிபதிகள் திரேதகா யுகத்தின் கதாநாயகனுன, அருளுலக ஆசானுன, அறிவுலகப் பேரரசனுன, ஒப்பாரும் மிக்காருமற்ற சித்தியாளனுன யோகீசுவரன், சூரியனுர் எனப்படும் யக்ஞுவல்லியின் குறிப்புக்களே **<u>மெய்யான இராமன் வரலாறு,</u>** **<u>யக்ஞுவல்லியின் இராமாயணம்</u>** **'சித்தர் இராமாயணம்'** என்று பெயரிடப்பட்டுப் போற்றிப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. [இராம கதை, இராம காதை, இராம கவிதை, இராம கீதை..... என்று பல பெயர்களால் ஏடுகளில் வேறுபட்டுக் குறிக்கப்படுகிறது. அதாவது, யக்ஞுவல்லியின் இராமன் கதை, இராமன் கெடுவு, இராவணப் போர், இலவகுசப் போர், வண்டமர் குழலியின் சாபம், சீதையின் வாகை, சீதையின் வெற்றி, சீதையின் வாக்கு, இராவண பாசம், விசுவாமித்திரர் சபதம், வசிட்டர் தோல்வி, இராக்கத-மானுடப் போர்..... என்று பல பெயர்களும் இராமாயணத்திற்கு யக்ஞுவல்லியால் தரப்பட்டுள்ளன. குறிப்பாக, இராவணன் நீதி, வண்டமர்குழலி புலம்பல், சீதையின்

அரற்றல், இராமனின் கீதை..... என்பவை எழுத்தறிவில்லாத பாமரர்களிடையிலும் யுகம் கடந்து செவிவழிச் செய்தியாக, பழமொழியாக, மூதுரையாக, தாலாட்டாக, ஒப்பாரியாக, காவடிச் சிந்தாக, தொழிலாளர் பாடலாக, கும்மிப் பாட்டாக..... பாடப்பட்டு வாழ்ந்து வருகின்றன.]

(2) சித்தர் இராமாயணம் இன்றைக்கு நாட்டு வழக்கிலுள்ள எண்ணற்ற இராமாயணங்களின் கண்ணுகவும், கருத்தாகவும் இருந்து வருகின்றது. இதுவே மெய்யான இராமனின் வரலாறு ஆகும். எனவே, **நாட்டுநடப்பிலுள்ள அனைத்து வகையான இராமாயணங்களிலிருந்தும் சித்தர் இராமாயணம் எப்படிப்பட்ட உண்மைகள் வெளியிடுகின்றது என்பதை விளக்குவதே இன்றைய தலையாய முயற்சி**யாக இருக்கிறது. அதாவது, இன்றுள்ள இராமாயணங்கள் அனைத்தும் மெய்யான இராமன் வரலாற்றிலிருந்து எப்படியெப்படி யெல்லாம் மாறுபடுகின்றன, வேறுபடுகின்றன, முரண்படுகின்றன, தவருக இருக்கின்றன..... என்ற பேருண்மைகளை விளக்குவதே பத்தாவது, பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் பணிகளில் பெரும் பங்கையும், முதன்மைச் சிறப்பையும் பெற்றிட்டது.

மேலும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் சித்தர் இராமாயணத்தைப் பரப்பியும், பிருமணர்களை வெல்ல முடியவில்லை. அதாவது, பிருமணர்களின் வாரிசுகளும் தொடர்ந்து முயன்று இராமனை தங்களுக்கும், தங்களுடைய வேதமதத்திற்கும் சாதகமாக சமசுக்கிருத இராமாயணத்தைப் பரப்பி வெற்றி பெற்று வந்திட்டார்கள். இதற்குப் பேருதவியாக **கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த ஆதி வால்மீகி என்ற தமிழ்ச் சங்கப் புலவர்** [இவருடைய பாடல் புறநானூற்றில் இருக்கிறது. மேலும் ஆதிகவி வால்மீகி என்பது தமிழர்களுக்கிடையில் வழக்காற்றில் இருந்திடும் ஓர் இயற்பெயரேயாகும். இந்தப் பெயரில்

வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் மூன்று சங்கங்களிலும் இருந்திருக்கிறார்கள். இந்தப் பெயர் அரச பாரம்பரியம், இலக்கியப் பாரம்பரியம், குரு பாரம்பரியம் மூன்றிலும் பல காலங்களில் குறிக்கப்படுகின்ற ஒன்றாகவே இருக்கின்றது. அதாவது, இந்த ஆதிகவி வால்மீகி என்ற பெயரில் பல அரசர்கள், புலவர்கள், மருத்துவர்கள், தளபதிகள், முனிவர்கள், இருடிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள்..... வாழ்ந்திருக்கிறார்கள். எனவே, ஆதிகவி வால்மீகி => முதலில் தோன்றிய கவிஞர் என்று பொருள் கொள்வது தவறு ஆகும்.] பிருமணர்கள் கூறியவாறு கதை நிகழ்ச்சிகளையும், கருத்துக்களையும் தோற்றுவித்துச் சமசுக்கிருத மொழியில் ஒரு புதிய இராமாயணத்தை எழுதிக் கொடுத்தார். இதையே பிருமணர்கள் “வால்மீகி இராமாயணம்” என்று போற்றிப் புகழ்ந்து அனைத்து இராமாயணங்களுக்கும் இதுவே மூலமானது, முதலானது, தாயானது என்ற ஆரியமாயையை உண்டாக்கி விட்டார்கள். இந்த மாயையால்தான் மெய்யான இராமன் வரலாற்றுக்குரிய சிறப்புக்களும், பெருமைகளும், பயன்களும் விளையாமல் போய்விட்டன.

இன்னும் சொல்லப் போனால் தமிழினத்தை வீழ்த்தவும், தாழ்த்தவும், தொடர்ந்து அடிமைச் சேற்றில் ஆழ்த்தவும், இன உணர்ச்சியிழந்து ஆரியரிடம் அடிமைப்படவும், மொழிப்பற்றை மறுத்தும் வெறுத்தும் சமசுக்கிருத மொழிக்கு அடிமைப்பட்டுக் கிடக்கவும், தொன்மைமிகு நன்மைமிகு தமிழினப் பண்பாட்டையும், நாகரீகத்தையும் மறந்து போலியான, பயனற்ற பிருமண வடஆரிய வேத நாகரீகத்திற்கும், பண்பாட்டிற்கும் அடிமைப்பட்டுக் கிடக்கவும் செய்து விட்டது. அதாவது திரேதகா யுகத்து 12,90,000 ஆண்டுகளையும், துவாபர யுகத்து 8,64,000 ஆண்டுகளையும் கடந்து; கலியுகம் பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து இந்துமதத்திற்குரிய இந்தியாவிற்குள் நுழைந்த பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய இனத்தைச் சேர்ந்தவன்தான் இராமன் என்றும்; தங்களுடைய மொழியான

சமசுக்கிருத மொழிதான் இராமன் காலத்தில் பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் இருந்தது என்றும் கூறியே தங்களை இந்த மண்ணுக்குரியவர்களாக ஆக்கிக் கொண்டார்கள்.

இதேபோலத்தான் துவாபர யுக நாயகனான கண்ணனையும் தங்களுடைய இனத்தவனாக விளம்பரப் படுத்தி, இவன் எழுதிய கீதையையும், மற்ற நூல்களையும், அவன் காலத்தவர்கள் வியாசர், தன்வந்திரி, துரோணர், வீடுமர், பஞ்ச பாண்டவர், பலராமர், துருவாசர், ..... எழுதிய அனைத்து வகையான இலக்கிய இலக்கணங்களையும் சமசுக்கிருத மொழிக்கே உரியவை என்று மிகப் பெரிய பொய்யைக் கூறித் தாங்கள் இம்மண்ணுக்குரியவர்கள் என்ற தவறான கருத்தை மெய்யான ஒன்று போல் ஆக்கி விட்டார்கள்.

இவற்றையெல்லாம் முறியடிப்பதற்காக எவ்வளவோ எழுதியும், பேசியும் பார்த்து விட்ட பிறகுதான் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி மெய்யான இராமன் வரலாற்றைக் கூறும் யக்ஞவல்லி இராமாயணமான சித்தர் இராமாயணத்தை மீண்டும் மக்களிடையிலேயே செல்வாக்குப் பெறச் செய்தார். அதாவது சித்தர் இராமாயணத்தை அன்றாடம் தனிமனிதர்களும், கோயில் விரிவுரையாளர்களும், கல்வி புகட்டும் பண்டிதர்களும் மிகுதியாகப் பரப்பிடுமாறு செய்தார். இதற்காகச் சித்தர் இராமாயணத்தின் கருத்துக்களும், கதை நிகழ்ச்சிகளும், வரலாற்றுப் பேருண்மைகளும் சாதாரண மக்களும் படித்தும், பேசியும், மகிழும் வண்ணம் 27 வண்ணங்களில் இறவா இலக்கியங்களாக்கினார்.

ஆனால், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி தாம் தோற்றுவித்த சூரியகுல அரசின் ஆதரவுக்காக மீண்டும் இராமாயணத்தை தமிழில் பாடச் செய்த ஏற்பாடு தோல்வியுற்றது. அதாவது கவிச் சக்கரவர்த்தி கம்பர் கி.பி. 8ஆம் நூற்றாண்டில்

இராமாயணக் காப்பியத்தை மீண்டும் பாடுமாறு ஆணையிடப் பட்டும் அவர் பிருமணர்களின் சூழ்ச்சியால் [சமசுக்கிருத] வால்மீகி இராமாயணத்தையே அடிப்படையாகக் கொண்டு பாடி முடித்திட்டார். அவருடைய ஏமாளித்தனத்தை உலகச் சுற்றுப்பயணம் சென்றிருந்த 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி திரும்பி வந்து திருத்தி விடாமல் இருப்பதற்காக ஓட்டக் கூத்தர்கள் எனப்படும் பிருமணக் கூத்தாடிகள் கம்பர் மகன் அம்பிகாபதியைச் சூழ்ச்சியாலும், கம்பரை நேரடியாகவும் கொலை செய்தார்கள். எனவேதான், கம்பருடைய இராமாயணம் பிருமணர்கள் உருவாக்கிய தவறுன, பொய்யான, சூழ்ச்சியான கருத்துக்களையும், செய்திகளையும், நிகழ்ச்சிகளையும், சதிகாரச் சிந்தனைகளையும் உண்மையான சித்தர் இராமாயணம் என்பது போல் மயக்கச் செய்து விட்டது.

இந்த மாபெரும் பாவச் செயலுக்காக, தவறுன செயலுக்காக கவிச் சக்கரவர்த்தி கம்பரைக் குறைவாகவும், எதிர்த்தும், மறுத்தும் கருத்துக்களைப் பரப்ப விரும்பாத 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள்; பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி போல் மீண்டும் சித்தர் இராமாயணமான யக்ஞவல்லியின் இராமாயணத்தை வாழ்வும் வடிவும் பெறச் செய்தார். அதேநேரத்தில் கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கோ, அவரது படைப்பான இராமாயணத்துக்கோ செல்வாக்கு குறையாமல் பார்த்துக் கொண்டார். ஏனெனில், தன்னுல் தேர்ந்தெடுக்கப் பட்டு உருவாக்கப் பட்ட கவிஞனுக்கு தாழ்ச்சியோ, வீழ்ச்சியோ, இகழ்ச்சியோ ஏற்பட்டுவிடக் கூடாது என வாழ்ந்தவர் அவர்.

மேலும், தான் வழங்கிய சித்தர் இராமாயண ஏடுகளின் அடிப்படையில் இராமாயணத்தை எழுதாத கம்பர் குருமொழி கேளாச் சீடஞக விளங்கியதால் தன் மகனை இழந்து, தானும் கொலையுண்டார். அந்தத் தண்டனையே போதும் என்று எண்ணிஞர் அவர். எனவேதான், கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கும், அவர்

மகனுக்கும் தீங்கிழைத்த கொடியவர்களை தண்டிப்பதில் அதிகமான அக்கரையும், ஆர்வமும் எடுத்துக் கொள்ளவில்லை.

ஒருவேளை கம்பர் உயிரோடு வாழ்ந்திருந்தால் உலகச் சுற்றுப்பயணம் செய்து முடித்து விட்டுத் திரும்பிய பீடாதிபதி கம்பர் கையாலேயே அவர் இராமாயணத்தை எரித்து விட்டு சித்தர் இராமாயணத்தைக் காப்பியமாக எழுதுமாறு செய்திருப்பார். அது நடவாமல் போய்விட்டது. அதாவது **<u>கம்பர் வாழ்ந்தும் கெடுத்தார், செத்தும் கெடுத்தார்</u>** என்பதற்கு விளக்கமாக வடஆரியர்கள் எனும் பிருமணர்களின் தவறான, பொய்யான, சூழ்ச்சியான, மோசடியான இராமாயணக் கதையை அழகிய சுவைமிக்க கம்பராமாயணமாகப் பாடியதால் அவர் உயிரோடு இருந்தபோது சித்தர்நெறிக்கு எதிராகச் செயல்பட்டது போல், அவர் எழுதிய இராமாயணமும் அவர் மாண்டதற்குப் பிறகு சித்தர் நெறிக்கு எதிராகவும், விரோதமாகவும், துரோகமாகவும் செயல்பட்டது. இப்படி கம்பரால் சித்தர் நெறிக்கு ஏற்பட்டிட்ட பாதிப்பு சித்தர் இராமாயணத்தைத் தழைக்க முடியாமல், கிளைக்க முடியாமல், செழிக்க முடியாமல் செய்து விட்டது.

இதே தவறைத்தான் பாரதம் பாடிய பெருந்தேவனாரும் செய்தார். அதாவது, பெருந்தேவனாரும் கம்பரைப் போலவே பிறமண்ணினரான பிருமணர்களின் சூழ்ச்சிக்கு அடிமையாகி சித்தர் பாரதத்துக்கு வேறான, முரணான, கேடு பயக்கக் கூடிய சமசுக்கிருத பாரதத்தை, பிருமணர்களின் பாரதத்தை, [வடஆரிய]வேதநெறி பாரதத்தை மகாபாரதக் காப்பியமாகப் பாடிவிட்டார். இவருடைய இந்தத் துரோகச் செயலால் இவரும் இவரைச் சார்ந்த பல்லவர்களும், பாண்டியர்களும், மற்ற உற்றார்களும் பெரியபெரிய இழிவுகளையும், அழிவுகளையும் பெற்றிட்டார்கள்.

இப்படிப் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி இலக்கிய வாழ்வில் **மெய்யான இந்துமத** மறுமலர்ச்சிக்கும், சித்தர்நெறியின் வளவளர்ச்சிக்கும், தமிழின விடுதலைக்கும் ஆயுதங்களாகப் பயன்படுத்த எண்ணிய இராமன் வரலாறும், கண்ணன் வரலாறும் நேர்மாறாக ஆரியர்களுக்கு மட்டுமே பாதுகாப்பையும், நன்மையையும் செய்யக் கூடியவையாக உருவாக்கப் பட்டுவிட்டன. இந்தத் தோல்விகளை யெல்லாம் தாங்கிக் கொண்டுதான் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி இலைமறை காயாகவே சித்தர் இராமாயணத்தை வளர்க்கவும், வாழ்வு பெறவும் செய்திட்டார்.

ஆனால், பிறமண்ணினரான பிருமணர்கள் என்னும் வடஆரியர்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு சித்தர் இராமாயணம் செல்வாக்குப் பெற முடியாமல் செய்து விட்டார்கள். இப்படியெல்லாம் பிருமணர்கள் தொல்லை கொடுத்திட்டதால்தான் இவர் **‘பிருமணச் சிசு கூடத் தமிழகத்தில் இருக்கக் கூடாது’** என்றும்; **‘சமசுக்கிருத ஒலி கூட தமிழகத்தில் கேட்கக் கூடாது’** என்றும் மிகமிகக் கடுமையான கொடுமையினை உருவாக்கி முடிவில் இராசராச சோழனுக்கு சாபம் கொடுத்து அவன் தற்கொலை செய்து கொள்ளவும் காரணமாக இருந்திட்டார்.

இச்செய்திகள் அனைத்தும் இவரைப் பற்றியும், இவரது மகன் கருவூர்த் தேவர் பற்றியும், பேரன் திருமாளிகைத் தேவர் பற்றியும் எழுதப்பட்ட ‘மூவர் உலா’ என்ற நூல் மிக விரிவாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும் உரைக்கின்றது. இந்த நூலின் ஆசிரியரே பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் நினைவாக தமிழின் அருமை பெருமை விளக்கும் “தமிழ் விடு தூது” என்னும் நூலை எழுதினார். மேலும், இவரே சித்தர் இராமாயணம், சித்தர் பாரதம் எனும் இரண்டு பெரும் சித்தர்நெறி காப்பியங்களுக்கு பல நகல்கள்

எழுதி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழ்ந்த தமிழர்களுக்கிடையில் பரவச் செய்தார்.

எனவேதான், கண்டப்பக் கோட்டை சித்தர் ஏளனம்பட்டியார் அவர்களால் பல அழகிய சிறுசிறு பகுதிகளாக சித்தர் இராமாயணத்தை, சித்தர் பாரதத்தை நூல்வடிவில் வெளியிட முடிந்தது. காரணம் 'தமிழ் விடு தூது' ஆசிரியரின் பணியில்தான் இந்த இருபெரும் நூல்களும் கிடைத்தன. இல்லையெனில், முழுமையான இராமாயணமும், பாரதமும் கிடைத்திருக்காது. எனவே, சித்தர் இராமாயணத்தை கோடிட்டுக் காட்டியது போல் மற்ற இராமாயணங்களிலிருந்து எப்படியெல்லாம் சித்தர் இராமாயணம் வேறுபடுகின்றது எனும் கருத்துப் பட்டியலிலிருந்து சில கருத்துக்களை வெளியிட முடிகிறது.

(3) **<u>சித்தர் இராமாயணப்படி விசுவாமித்திரரின் சூழ்ச்சியால்தான்</u>** மானுட இனத்தைச் சார்ந்த பதினாறு (16) வயது நிறைந்த சூரியகுல இளவரசனான இராமனுக்கும், முப்பத்திரண்டு (32) வயது நிரம்பிய சனகரின் 'வளர்ப்பு மகளான' அரக்கர் குல மகளான சீதைக்கும் திருமணம் நடந்தது.

(4) அரக்கர்குலத் தலைவனான <u>இலங்கையர் கோன் இராவணனின் மகளான சீதையும், மானுடகுல இராமனும்</u> இருபது வருடங்கள் இல்லறம் நடத்தியும் குழந்தை பிறக்கவில்லை. அந்த நிலையில் இராமனுக்கு முடிசூட்ட தசரதன் நினைத்தார். வசிட்ட முனிவர் உட்பட தசரதன் அரண்மனையிலிருந்த அனைவரும் <u>அரக்கர் குலத்தைச் சேர்ந்த சீதை பட்டத்து அரசியாக வருவதை விரும்பவில்லை.</u> மேலும், சீதைக்கு பிறக்கக் கூடிய குழந்தை அரசாளக் கூடாது என்று அஞ்சினார்கள். எனவேதான், தீர்த்தங்கள் ஆடி வனவாசம் வாழ்ந்து வரச் செய்தார்கள். இந்தச் சதியில் பரதனும், தசரதனும் தவிர அனைவரும் பங்கு பெற்றார்கள். வசிட்டர் இந்த சதிக்குத் தலைமை தாங்கியதின் மூலம் தனது பகைவரான விசுவாமித்திரரின்

செயல்திட்டத்தை முறியடித்தார். (சூரியகுலம் தொடர்ந்து அரசாளாமல் இனக் கலப்புற்ற புதிய அரசகுலத்தைத் தோற்றுவித்தல் எனும் செயல்திட்டம்.)

(5) சீதையும் இராமனும் தங்களை மறந்த நிலையில் கூட வாழ்ந்து விடக் கூடாது என்பதைக் கண்காணிக்கத்தான் இலக்குவனை இராமனோடு அனுப்பி வைத்தார்கள் அரண்மனைவாசிகள். இந்த இலக்குவனுக்குச் சீதை அரக்க இனத்தைச் சேர்ந்தவள் என்றுதான் தெரியுமே தவிர, அவள் இராவணன் மகள் என்று முழுமையாகத் தெரியாது. ஆனால், இராவணன் கொலையுண்டு வீழ்ந்தவுடனேயே சீதை இராவணன் மகள்தான் என்பதைப் புரிந்து கொண்டான். அடிபட்டுக் கீழே விழுந்த இராவணனை இராமன் அளவுக்கு மேல் மதித்தது கண்டு இராமனையும் அரக்க இனத்தைச் சார்ந்தவனாகவே நினைத்தான்.

அதனால்தான், இராமன் மூன்று மாதக் கருவைச் சுமந்திருந்த சீதையைக் கொலை செய்யுமாறு ஆணையிட்டபோது அவனை அரக்க இனத்துக்குரிய பண்பைப் பெற்று விட்டான் என்று இலக்குவன் சீற்றத்தோடு குறை கூறுகிறான். சீதையைக் கொலை செய்யக் கூடப் பயப்படுகிறான். மேலும், இலங்கையிலிருந்த திரிசடையும் சூர்ப்பனகையும் சீதையைத் தான் கொன்றால் தன்னைச் சும்மா விடமாட்டார்கள் என்று பயந்தான்.

இலக்குவனே கூறுகிறான், ‘இராவணன் மாண்டதும் வீடணன் மிகப் பெரிய அதிர்ச்சிக்குள்ளானான்’ என்றும்; ‘சீதை இராவணேசுவரன் மகள் என்று தெரிந்ததும் ஆளே முற்றிலும் மாறி விட்டான்’ என்றும் குறிக்கிறான். மேலும், ‘சீதைக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டால், வீடணன் சீதைக்காகப் பரிந்து கொண்டு எதையும் செய்ய முன் வருவான்’ என்று குறிக்கின்றான்.

(6) சீதை கம்பனின் இராமாயணத்திலும், மற்ற இராமாயணங்களிலும் குறிப்பது போல் விருப்பமில்லாமல் இராவணனால் கட்டாயப்படுத்தி இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட வில்லை. சித்தர் இராமாயணத்தில் சீதை இராவணனைக் கண்டவுடன் 'கன்று தாய்ப்பசுவைக் கண்டதும் ஓடிச் செல்வது போல்', ஓடிச் சென்று தன்னையறியாமல் பாசத்தால் கட்டுண்டு நின்றாள். அப்பொழுதே இராவணன் அவளிடம் அவள்தான் தன்னுடைய மகள் என்பதைக் கூறிவிடுகிறான். அவளும் அதையுணர்ந்து பிறந்தது முதல் காணாத தன் தந்தையின் காலில் விழுந்து வணங்கி இறுகக் கட்டித் தழுவி அழுது புலம்புகிறாள்.

அவளிடம் இராவணன் குறிப்பிட்ட காலம் வரை அவள் தன்னுடைய மகள் என்பது வேறு யாருக்கும் தெரிய வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறான். ஏனென்றால், எதிர்பாராது நிகழ்ந்து விட்ட சூர்ப்பனகையின் மானபங்க நிகழ்ச்சியால் சூர்ப்பனகையும், அவளைச் சார்ந்தவர்களும் இராம இலக்குவனர்களைத் தண்டிக்க விரும்புகிறார்கள் என்றும்; அதனால் இராமன் தனது மருமகன் என்பது தெரிந்தால் சூர்ப்பனகையும் அவளைச் சேர்ந்தவர்களும் வீணான குழப்பங்களையும், இராமனுக்கும் சீதைக்கும் நேரடியாகவே ஆபத்தையும் விளைவிக்க முற்படுவார்கள்.

அதே நேரத்தில் தன் மனைவி வண்டமர்குழலிக்கு சீதை தனது மகள் என்று தெரிந்து விட்டால் உடனே அவள் தன் மகளைக் காட்டுக்கு அனுப்பிய அயோத்தி அரச குடும்பத்தைப் பூண்டோடு அழிக்கப் படையெடுக்கச் செய்வாள். தான் எவ்வளவுதான் தடுக்க முயன்றாலும் தன் தம்பிகளும், மகன்களும் அரக்கர் குலத்தவர்களும் சீதைக்காக சூரிய அரசகுலத்தையே அழித்தொழிக்க முற்பட்டிடுவார்கள். அப்பொழுது இராமன் நிலை மிகவும் சிரமமாகி விடும். அரக்க குலத்துக்கும், அரசகுலத்துக்கும் (மானுட அரசகுலத்துக்கும்) ஏற்பட்டிருக்கும் நல்ல உறவு விரைவில் தீமை பயப்பதாகி விடக்

கூடாது என்று தான் பயப்படுவதாகக் கூறுகிறுன். அதற்குச் சீதை ஒப்புக் கொள்ளுகிருள்.

**குறிப்பு:** இப்படி இராவணன் சீதையிடம் கூறியவைகளே சீதை இராமனிடம் கூறிய பொழுது இராமன் உணர்வு வயப்பட்டு வாய் திறந்து, “இராவணேசுவரா! நீ நீதிமான்; பேரருளாளன்; அறமகன்; சிவாநுபூதிச் செல்வன்; மகாவீரன்; காமனே யொத்தவன்; ஆயிரமாயிரம் இராமர்கள் சேர்ந்தாலும் உனக்கு ஈடாக மாட்டார்கள். மகள் மீது கொண்ட பாசத்தால் மாண்டாய்; நீ பாச உணர்வின் எல்லை; உனக்கேற்பட்டது போல் வேறு யாருக்கும் வாழ்க்கையில் போராட்டங்களும், கவலைகளும் ஏற்பட வேண்டாம்; நீ நெஞ்சத்தாலும் பெருவீரன், செயலாலும் பெருவீரன்; உன்னை மதிக்கிறேன், வணங்குகிறேன்; வீரமரணம் பெற்ற உனக்குத் தேவலோக இன்பங்கள் நிறைய கிடைக்கட்டும். நீ என்றென்றும் அமரனுக வாழ்வாயாக. உன் மகன்களுக்கும் உன் போல் தேவலோக பதவிகள் கிடைக்கட்டும். என் தந்தை என்னுடைய பிரிவைத் தாங்க முடியாமல் மாண்டார். நீயோ உன் மகன்கள் இரண்டு பேர் மாண்டும் மனவலிமையோடு போரிட்டாய். உன்னை எப்படிப் புகழ்வதென்றே எனக்குத் தெரியவில்லை. நீயே அரசர்க்கு அரசனுவாய்! மன்னர்க்கு மன்னனுவாய்! பெருவீரம் படைத்த உன் மருமகன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப் படுகிறேன். உன்னை வண்ண ஓவியமாகவும், வடிவழகு மிக்க சிலையாகவும் நானே படைக்கிறேன். அவை சூரியகுலத்தின் வழிபாட்டிற்கு உகந்தவையாக என்றென்றும் இருக்கும். சிறந்த அரசியலறிவும், நீதியறிவும், அறநூல் தேர்ச்சியும், உயர்ந்த சிவபத்தியும் மிக்க நீயே இனிமேல் எங்கள் குலதெய்வமாவாய்! நீயும் உன் துணைவி வண்டமர்குழலியும் ஒருங்கமர்ந்திருக்கும் **‘அரசவை ஓவியம்’** (‘அரியாசன ஓவியம்’ என்று பாடவேறுபாடு உண்டு) நாங்கள் வணங்கும் சிவனும், பார்வதியும் திருக்கயிலையில் அமர்ந்திருக்கும் காட்சியின் வண்ண ஓவியமாகவே திகழ்கின்றது. உங்களிருவரையும்

காண்பார் கை தொழாமல் இருக்க மாட்டார்கள். உங்களை என் மாமன், மாமியாக கூறிக் கொள்வதில் மிகவும் பெருமைப் படுகிறேன் .....” என்றெல்லாம் புகழ்ந்து புகழ்ந்து கூறியதால்தான் தன் தந்தையையும் தாயையும் இழந்து வருந்திய சீதை இராமனோடு மகிழ்ச்சியாக இருந்தாள்.

அதாவது இராமன் தன் தந்தையைக் கொன்றும், தன் தாயின் சாவுக்குக் காரணமாக இருந்தும் அவன் மீது வெறுப்பு வராமல் அவனோடு இனிய இல்லறம் நடத்திக் கருவுற்றாள் என்று சித்தர் இராமாயணத்தில் இராமன் இராவணேசுவரனைப் பற்றியும், வண்டமர் குழலியைப் பற்றியும் போற்றிப் புகழ்ந்த கருத்துக்களையும், அவர்களைத் தமது குலதெய்வமாகவே ஏற்றுக் கொண்ட செய்தியும் பலவாறு இலக்கியச் சுவைபடப் பல இடங்களிலும், பலர் வாயிலாகவும் விளக்கப் படுகின்றன.

(7) சீதை அசோகவனத்தில் அழுது புலம்பி அரற்றிக் கொண்டிருக்க வில்லை. சீதை மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தாள். இலங்கை மாநகரிலேயே குளிர்ச்சியும், வசதிமிக்க கட்டிடங்களும், அழகுமிக்க நீரூற்றுக்களும், செய்குன்றுகளும், தடாகங்களும், கனிமலர்ச் சோலையும் மிகுந்த பகுதி அசோகவனம்தான். இந்த அசோகவனத்தில் பளிங்கு மாளிகைகளிலும், பனிநீர்த் தடாகங்களிலும், பழங்கள்மிகு சோலைகளிலும், மலர்கள் மிகுந்த பூங்காக்களிலுமே சீதை மகிழ்ச்சியாக உலா வந்தாள். அவளுக்குத் துணையாக அவளுடைய சிற்றப்பா வீடணனின் மகள் திரிசடை இருந்தாள்.

இராவணன் திரிசடையிடம் சீதை அவளுடைய அக்காள் என்பதைக் கூறி அந்த இரகசியத்தைக் கடைசி வரை காப்பாற்றுமாறு உறுதிமொழி பெற்றிருந்தான். எனவேதான், திரிசடை தன்னுடைய அக்காளின் நினைவால்தான் தனது பெரியப்பா தன்னை வளர்ப்பு மகளாக அன்போடு வளர்த்தார் என்பதை உணர்ந்து செயல்பட்டாள்.

தன் அக்காள் சீதையை பிறந்தவுடனேயே தந்தப் பெட்டியில் வைத்துக் கடலுள் விட்ட செய்தியைத் தனது பெரியப்பாவும், பெரியம்மாவும் எத்தனையோ ஆயிரமாயிரம் முறை வாய்விட்டுக் கூறிப் புலம்பியதைக் கேட்டவள் திரிசடை என்பதால் தன்னுடைய பெரியப்பாவிற்கும், பெரியம்மாவிற்கும் சீதை மேல் எல்லையில்லாத அன்பு இருப்பதை உணர்ந்து தானும் சீதையின் மீது எல்லையில்லாத அன்பைப் பொழிந்தாள். அதனால், சீதைக்கும் திரிசடைக்கும் இயற்கையாக இருந்த குருதிப்பாசம், அக்காள்-தங்கை என்ற இயற்கையுணர்வு மேலும் மேலும் வளர்ச்சியுற்று வலிமை பெற்றிட்டது.

எனவே, சீதை சனகன் மாளிகையிலும், தசரதன் அரண்மனையிலும் வாழ்ந்த வாழ்வை விட மிகுந்த மகிழ்ச்சியும், அமைதியும் உடைய வாழ்வைத்தான் [அசோக வனத்தில்] வாழ்ந்தாள். அவளுக்குத் தன் கணவனைப் பிரிந்திருக்கின்றோமே என்ற வருத்தம் இருந்த போதிலும், தன் தந்தை இராவணேசுவரன் தன்னுடைய அத்தை சூர்ப்பனகையின் கோபம் தணிந்தவுடன் தன் கணவன் இராமனை இலங்கைக்கு அழைத்து வந்து; தங்கள் இருவருக்கும் விண்ணவரும் மண்ணவரும் வியக்கும் வண்ணம் விழாச் செய்து தானே நேரில் அயோத்திக்கு அழைத்துச் சென்று தன் கணவனின் முடிசூட்டு விழாவைச் சிறப்பாக நிகழ்த்தித் தருவதாகவும் வாக்களித்திருந்ததால்; கணவனைப் பிரிந்திருந்த வருத்தத்தைப் பெரிதுபடுத்தாமல் வாழ்ந்தாள் என்று சித்தர் இராமாயணம் சீதையைப் பற்றிய புதிய புரட்சிகரமான செய்தியைத் தருகின்றது.

<u>இராவணன் தன் மகள் சீதையை அன்றாடம் அசோகவனத்திற்கு வந்து கண்டு மகிழ்ந்து சென்றான்</u>. அவளைத் தான் வளர்க்காமல் குழந்தையிலேயே கடலில் விட்டு விட்டதற்காக அடிக்கடி வருத்தம் தெரிவித்து சீதைக்குத் தன் மீதும், தன் மனைவி மீதும் மிகுந்த பற்றும், பாசமும், மதிப்பும் ஏற்படச் செய்தான். தன் [மகள்]

சீதையின் மனநிறைவிற்காக அசோகவனத்தில் ஏராளமான புள்ளிமான்களும், மயில்களும், புறுக்களும், முயல்களும், பாடும் பறவைகளும் உலகெங்குமிருந்து வரவழைத்து அசோகவனத்தை மிகச் சிறந்த இன்பப் பொழுதுபோக்குச் சோலையாக மாற்றித் தந்தான். தன் மகள் சீதையை அன்பு மழையால் நீராட்டினுன். ஆனுல், சூர்ப்பனகை கோபம் தணிவதற்கு முன்னுல் அசோக வனத்திலிருக்கும் சீதை தன்னுடைய மகள்தான் என்ற பேருண்மை வெளிப்பட்டு விடக்கூடாது என்பதற்காக மிகவும் சிரமப் பட்டான்.

சீதை தன்னுடைய தாயையும் தம்பிகளேயும் பார்க்க வேண்டும் என்று துடியாய்த் துடித்த போதும் இராவணன் மிகப் பெரிய அழிவு சூர்ப்பனகையால் விளேந்து விடும் என்று அஞ்சியே சீதையைச் சிறிது காலத்திற்குப் பொறுமையாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

ஆனுல் <u>சீதையோ திரிசடையை அடிக்கடி இராவணேசுவரனின் மாளிகைக்கு அனுப்பித் தன் தாயைப் பற்றியும்; தம்பிகளேப் பற்றியும் செய்திகளேச் சேகரித்து மகிழ்வாள்</u>. தன்னுடைய தாய் வண்டமர்குழலி ஏழிசைவல்லியாகத் திகழ்ந்ததையும்; சிவபூசை செய்வதில் மிகச் சிறந்த அருட்செல்வியாக விளங்கினுள் என்பதையும் கேட்டுக் கேட்டு, நினேத்து நினேத்துப் பூரித்துப் பெருமிதப் பட்டாள்.

சீதையை அசோகவனத்தைத் தாண்டி எங்கும் செல்லக் கூடாது என்று இராவணன் கண்டிப்பான வேண்டுகோள் விடுத்திருந்ததால்தான் சீதை தன்னுடைய ஆசைகளேயெல்லாம் அடக்கிக் கொண்டு அசோக வனத்திற்குள்ளேயே கூண்டுப் பறவைபோல் வாழ்ந்தாள். பலமுறை சீதை தன் கணவனுக்குத் தூதனுப்பக் கூறியபோதும், இராவணேசுவரன் ‘சூர்ப்பனகையின் கோபம் தணியட்டும்’ என்று பதில் கூறினுன்.

அதனுல்தான், அனுமன் நேரில் வந்து சீதையிடம் இராமனேப் பற்றிக் கூறிய போதும் சீதை அனுமனேடு செல்ல விரும்பாமல்

<u>இராமனைத் தன்னுடைய தாய் வீட்டிற்குத் தேடி வருமாறு</u> செய்தியனுப்பினாள். அனுமனும் வண்டமர்குழலிக்கும் சீதைக்கும் உருவ அமைப்பில் இருந்த ஒற்றுமையைக் கண்டு பெரிதும் குழம்பிப் போனான். மேலும், சீதையை அசோகவனத்தில் கணவனைப் பிரிந்து கவலையேதும் இல்லாமல் மகிழ்ச்சியாய் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். எனவேதான், இராவணேசுவரன் ஏதோ மாயம் செய்து சீதையின் மனநிலையை மாற்றியிருப்பதாகக் கோபம் கொண்டு ஆத்திரத்தில் அசோகவனத்தைச் சிதைத்தான். இலங்கை மாநகரையும் நெருப்பிட்டுப் பெருமளவு சிதைத்தான். இராவணனுடைய ஒரு மகனையும் கொன்றான்.

பிறகு சீதையைப் பார்க்க அஞ்சி நேரடியாக இராமனிடம் ஓடிச் சென்று, 'விரைந்து இலங்கை சென்று சீதையை மீட்காவிட்டால் சீதை உனக்குக் கிடைக்காமல் போய் விடுவாள்' என்று கவலையோடு கூறினான். அதன் பேரில்தான், இராமன் விரைந்து இலங்கையை நோக்கி வந்தான் என்று அசோகவனம் பற்றிய செய்திகள் சித்தர் இராமாயணத்தில் மற்ற இராமாயணங்களில் காணப்படுவது போலில்லாமல் வேறுபட்டுச் சித்தரிக்கப் படுகிறது. இவை போன்ற செய்திகள்தான் சித்தர் இராமாயணத்தை மீண்டும் மக்களிடையே பரப்பியேயாக வேண்டும் என்ற அக்கரையையும், ஆர்வத்தையும் பிறக்கச் செய்தன.

(8) <u>திரிசடை தன்னுடைய பெரியப்பாவும், பெரியம்மாவும் தன்னுடைய அக்காள் சீதையின் ஞாபகமாகத்தான் தன்னைத் தத்தெடுத்துத் தங்களுடைய மகளாக வளர்த்தார்கள்</u> என்ற உணர்வால் சீதையிடம் அளப்பரிய அன்பும், பற்றும், பாசமும், பத்தியும் கொண்டிருந்தாள். இந்த அன்புநிலை போர்க்களத்தில் மாண்டு கிடந்த தனது பெரியப்பா பெரியம்மா பிணங்களின் மீது சீதை

விழுந்து, புரண்டு, புலம்பி, அழுது, அரற்றித் துடியாய்த் துடித்த காட்சிகள் மேன்மேலும் வளரச் செய்து விட்டன.

அதாவது, சீதை தனது தந்தையான இராவணேசுவரனின் பிணத்தின் மீதும், தாயான வண்டமர்குழலியின் பிணத்தின் மீதும் விழுந்து புரண்டு கதறியழுத காட்சி திரிசடையையும், மற்ற அரக்ககுலப் பெண்களையும், வீடணனையும், அவனோடிருந்த அரக்கர்களையும் முழுமையாகப் பாதித்தது. இந்தப் பாதிப்பால் அரக்கர் குலத்தார் அனைவருமே சீதையைத் தங்களுடைய உயிரினும் மேலாக மதித்தார்கள், விரும்பினார்கள். இன்னும் சொல்லப் போனால், சீதையே தங்களுடைய அரசியாக இலங்கை அரியாசனத்தில் அமரவேண்டும் என்று விரும்பினார்கள். சீதையைத் தங்களுடைய தெய்வமாகவே கொண்டாடினார்கள்.

இதில் திரிசடை அனைவரையும் கடந்து சீதையுடனேயே என்றென்றும் இருக்க வேண்டும் என்ற வெறிநிலைக்கு வந்துவிட்டாள். ஆனால் அவளுக்கு இராமனை அறவே பிடிக்காமல் போய் விட்டது. ஏனெனில் தன்னுடைய அக்காளான சீதை தன்னுடைய தந்தைக்கும் தாய்க்கும் இறுதி நெருப்பு வைத்து ஈமக்கடன்கள் ஆற்றி, கண்ணீரும் கம்பலையுமாக வாய்விட்டுப் புலம்பியபடி இராமனைப் பார்க்கச் சென்றபோது; இராமன் கண்மூடித்தனமாக அரக்கர் குலப் பெண்ணை தன்னால் அழைத்துச் செல்ல இயலாது என்று மறுத்து; அவள் தன்னோடு வரவேண்டுமென்று நினைத்தால் நெருப்பில் மூழ்கி எழுந்து தன்னை கணவன் மேல் பத்தியுள்ளவள் என்று மெய்ப்பிக்க வேண்டும் என்று ஆணையிட்ட நிகழ்ச்சியை அவளால் மறக்கவே முடியவில்லை. அது மட்டுமல்லாமல், இராமன், தன்னுடைய அக்காளான சீதையை அரக்கர் இனத்தைச் சார்ந்தவள் என்று வெறுத்து ஒதுக்க முற்பட்ட [நிலையில்] சீதையோடு அரக்கர் இனத்தைச் சேர்ந்த தான் வருவதை

இராமன் விரும்ப மாட்டான்; ஒப்புக் கொள்ள மாட்டான் என்று எண்ணினாள்.

இதுபற்றி யக்ஞவல்லி, "சீதை அரக்கர் இனத்தின் அழிவிற்காகத் தன்னைப் பழிவாங்க நேரிடும் என்று இராமன் அஞ்சினான். இராவணேசுவரனின் ஈமச்சடங்கில் சீதை வெளிப்படுத்திய தாய்ப்பாசமும், தந்தைப்பாசமும் இராமனை அவளிடத்து மிகவும் அச்சம் கொள்ளச் செய்தது. அதாவது, அரக்கர் இனத்தைச் சேர்ந்த சீதை தன்னுடைய தாய் தந்தையரும், உடன் பிறந்தவர்களும் தன்னுடைய கணவனால்தான் அழிந்தார்கள் என்பதனையெண்ணித் தன்மீது வெறுப்புணர்ச்சியும், கசப்புணர்ச்சியும், எதிர்ப்புணர்ச்சியும் கொண்டு தன்னை மனநிம்மதியே இல்லாது செய்து விடுவாளோ என்று கவலை கொண்டான்.

"இவற்றிற்கெல்லாம் மேலாக இராவணேசுவரனின் ஈமக்கடனில் திரிசடையும், சூர்ப்பனகையும் சீதையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுத நிகழ்ச்சியும், சீதையைத் தெய்வமாகவே நினைத்து அனைவரும் அவளுடைய காலிலே விழுந்து பலமுறை கும்பிட்டு அவளிடம் வாழ்த்துப் பெற்றதையும் மறக்கவே முடியவில்லை. அவனுக்குள் சீதை இலங்கைக்கு அரசியாகவே முடிசூட்டிக் கொண்டு விடுவாளோ என்ற அச்சம் குடிகொண்டு விட்டது. அதற்குக் காரணம் <u>சீதை தன்னுடைய அண்ணன் மகள் என்பது தெரிந்தவுடனேயே; வீடணன் தன்னுடைய அண்ணனுடைய குடும்பத்திற்குத் தான் செய்த துரோகங்களுக்குப் பரிகாரமாக இலங்கை அரசைச் சீதையின் காலடியில் காணிக்கையாக ஆக்கவே துணிந்து விட்டான்</u> .....

"இவற்றால்தான், இராமன் சீதையால் தனக்கு ஆபத்து நேராது என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்காகச் சீதையை மானுடர்கள் அரக்கர் குலப் பெண்ணை அரசியாக ஏற்றுக் கொள்ளத் தயங்குவார்கள் என்பதால்; அவள் நெருப்பில் நீராடி மானுடப் பெண்ணின்

வாழ்க்கை வாழுவதாக உறுதி கூற வேண்டுமென்று கூறினுன்....." என்று சிறப்புக் குறிப்பாகப் பல இடங்களில் குறிக்கிருர். இதுபோல் சித்தர் இராமாயணம் எனப்படும் யக்ஞவல்லியின் குறிப்புக்களில் குறிப்பிட்ட சில கருத்துக்களும், நிகழ்ச்சிகளும் அடிக்கடி திருப்பித் திருப்பிப் பல இடங்களில் குறிக்கப்படுவது மரபாக இருக்கிறது.

(9) திரிசடை சீதையின் மறைவால் புலம்பும் புலம்பல்களிலிருந்து பல அரிய செய்திகள் வெளிப்படுகின்றன. அதாவது, சீதை கருவுற்றிருக்கிருள் என்ற செய்தி இலங்கைக்குக் கிடைத்து சீதையைக் காண திரிசடையும், சூர்ப்பனகையும் அயோத்தி வருவதற்குள் இராமன் கட்டளேயால் இலக்குவனுல் சீதை வெட்டிக் கொலே செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டு விட்டாள் என்ற செய்தி கிடைக்கிறது. இந்தச் செய்தியால் இவர்கள் இருவரும் ஏமாற்றமடையாமல் அயோத்திக்கே வந்து சீதையைப் பற்றிய செய்தியை நம்பாமல் இலக்குவனேச் சென்று சந்திக்கின்றனர்.

இலக்குவன் அச்சத்தால் நடுநடுங்கி சீதையைத் தான் கொலே செய்யாமல் உயிரோடு காட்டில் விட்டு வந்த செய்தியைக் கூறினுன். அதன்பேரில்தான் அவர்கள் இருவரும் சீதையைக் காட்டில் தேடிக் கண்டுபிடித்து அவளோடு தங்கினுர்கள். இவர்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கருவுற்றிருந்த சீதை இலங்கைக்கு வர மறுத்து விட்டாள். மேலும் சீதை தன்னேப் பொறுத்தவரை உலகத்தவர்க்கு இறந்தவளாகவே வாழ விரும்புவதாகக் கூறி விட்டாள். ஏனென்ருல், இலக்குவன் தன்னேக் கொலே செய்யாமல் விட்டுவிட்ட செய்தி வெளியுலகுக்குத் தெரிந்தால் அயோத்தி அரச குடும்பத்தார்கள் எப்படியும் மீண்டும் தன்னேக் கொலே செய்ய முயல்வார்கள் என்று தெளிவாகக் கூறினுள். அதனுல், திரிசடையும் சூர்ப்பனகையும் சீதை உயிரோடு இருக்கும் செய்தியை இலங்கையில் எவருக்கும் தெரிவிக்க வில்லே.

ஆனால், இருவரும் இலங்கைக்கும், சீதை வாழ்ந்த அயோத்தி காட்டுக் குடிலுக்கும் மாறிமாறிச் சென்று சீதையைக் காப்பாற்றினார்கள். சீதையின் வேண்டுகோளால் வால்மீகியும் யக்ஞவல்லியும் சீதை உயிரோடிருப்பது பற்றி யாரிடமும் எதுவும் தெரிவிக்கவில்லை. சீதைக்காகவே வால்மீகியின் ஆசிரமம் பெரியதாகவும், வசதி மிகுந்ததாகவும் அமைக்கப்பட்டது. யக்ஞவல்லியின் நம்பிக்கைக்கும், வால்மீகியின் நம்பிக்கைக்கும் உரியவர்கள் மட்டுமே சீதை தங்கியிருந்த ஆசிரமப் பகுதிக்கு வருவதற்கு அனுமதிக்கப் பட்டார்கள். அதாவது, சீதை அங்கு தங்கியிருந்த செய்தி மிகுந்த இரகசியமாகக் காப்பாற்றப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அந்த ஆசிரம வட்டாரக் காட்டுப் பகுதிகளில் காவல் காக்கும் பொறுப்பு சூர்ப்பனகையிடம் ஒப்படைக்கப் பட்டது. அவள் தனது நம்பிக்கைக்குரிய அரக்கியர்கள் பலரை இலங்கையிலிருந்து அயோத்தி மாநகரைச் சுற்றியுள்ள அனைத்துக் காடுகளையும் பாதுகாக்கும் பணியில் நியமித்தாள். அதாவது அயோத்தி அரசைச் சார்ந்த யாருமே சீதை வாழ்ந்த காட்டுப் பகுதிக்குள் நுழைய முடியாதபடிக் கடுமையான ஏற்பாடுகள் செய்திட்டாள் சூர்ப்பனகை.

இதேபோல் திரிசடை தன்னுடைய நம்பிக்கைக்குரிய அரக்கியர்கள் பலரை இலங்கையிலிருந்து கொண்டு வந்து சீதைக்குப் பணி செய்யவும், சீதை வாழ்ந்த ஆசிரமத்து உட்காவலையும், புறக்காவலையும் திறமையாகவும் கடுமையாகவும் நிகழ்த்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்தாள். இலங்கையில் அரக்கர் குலத்தைச் சேர்ந்த ஆண்களே ஏறத்தாழ இல்லையென்று கூறுமளவிற்கு; எண்ணிக்கைக்குரிய மிகச்சில முதியவர்களும், சிறுவர்களுமே இலங்கையில் இருந்தார்கள். எனவேதான், சீதைக்கு குழந்தை பிறந்து அது வளர்ந்து; பிறகு இலங்கையிலிருந்து அரக்கர் குல இளைஞர்களையும், முதியவர்களையும் அழைத்து வந்து அயோத்தி அரசோடு போரிட்டு; சீதைக்கு

இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிதேவதையின் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்பதே அவர்களின் செயல்திட்டம். அதற்குச் சீதையும் ஒப்புக் கொண்டாள்.

இதே சமயத்தில் இலங்கையை ஆண்டு கொண்டிருந்த வீடணன் தன் அண்ணன் மகளான சீதை இராமனாலும் இலக்குவனாலும் கொலை செய்யப்பட்டு விட்டாள் என்ற செய்தி கிடைத்து மிகவும் கலங்கிப் போனான். அவனுக்கிருந்த ஆத்திரத்தில் இலங்கையிலிருந்த வயோதிகர்களையும், சிறுர்களையும், பெண்டிர்களையும் படையாகத் திரட்டிக் கொண்டு அயோத்தி வந்து இராமனுடன் போர் புரியவே துடிதுடித்தான். ஆனால், சீதை இறந்த பிறகு அயோத்தி அரசகுலத்தைக் கண்டித்தோ, தண்டித்தோ கிடைக்கக் கூடிய பலன் ஏதுமில்லை என்பதையெண்ணியே செயலற்றுக் கிடந்தான்.

இருந்தாலும் அவனுக்கு இராமனிடம் பழைய பத்தியும், விசுவாசமும் இருக்குமோ என்றஞ்சியே சூர்ப்பனகையும் திரிசடையும் அவனிடம் சீதை உயிரோடு இருப்பதைப் பற்றிய செய்தியைக் கூறவேயில்லை. ஆனால், சூர்ப்பனகையும் திரிசடையும் தங்களுடைய நம்பிக்கைக்குரிய அரக்கரிடமும் அரக்கியரிடமும் இராவணனும், மேகநாதனும்(இந்திரசித்து) கொலை செய்யப்பட்டதற்குக் காரணமாக இருக்கும் அயோத்தி அரசகுடும்பத்தாரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று கூறி வெறியுணர்ச்சியை வளர்த்திட்டார்கள். இந்த வெறியுணர்ச்சிதான் பிற்காலத்தில் இலவகுசர்கள் அயோத்தி அரசையே 48 மாதங்களுக்கு அதிரடித் தாக்குதலால் ஆட்டிப் படைத்து இறுதியில் இராமனையும் இலக்குவனையும் தங்களுடைய தவறுகளுக்குத் தண்டனையாகச் சரயு நதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள[வைக்க]த் தேவையான எல்லா உதவிகளையும் பாதுகாப்புகளையும் வழங்கிற்று.

(10) யக்ஞவல்லியின் குறிப்புக்களின்படி சித்தர் இராமாயணம் மற்ற எந்த இராமாயணத்திலும் கூறாத அளவிற்கு இராமாயணக் கதாநாயக நாயகிகளின் வயதையும், நிகழ்ச்சிகளின் கால அளவையும் மிகமிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அறிவிக்கின்றது. அதாவது இராமனும் இலக்குவனும் தன்னுடைய 12வது வயதில்தான் விசுவாமித்திரரோடு காட்டுக்குப் போனார்கள். விசுவாமித்திரர் பல யாகங்களை 9 மாதங்கள் கோள்களுக்காகவும், 12 மாதங்கள் இராசிக்காகவும், 27 மாதங்கள் விண்மீன்களுக்காகவும் செய்து முடிக்க 48 பருவபூசைகளை (முழு நிலவு நாளில்), 48 அமாவாசை வேள்விகளை, 48 மூன்றும் பிறைப் பூசைகளைச் செய்து முடித்தார். அதாவது, கந்தழிநிலைப் பூசைக்கும் (சூரிய பூசை), கொடிநிலைப் பூசைக்கும் (மூன்றும் பிறை), வள்ளிநிலைப் பூசைக்கும் (அமாவாசை வேள்வி) உரிய கால அளவுகளைச் செலவிட்டுத் தன்னுடைய பூசைகளில் முழுவெற்றி பெற்றார்.

அதற்குப் பிறகு, தன்னை அரசகுருவாக ஏற்றுக் கொள்ளாத சூரிய குலத்தைக் கேலிக்கும், நலிவுக்கும், மெலிவுக்கும், அழிவுக்கும் உரியதாக்குவதற்காக 16 வயதான இராமனை 32 வயதான சீதையைச் சூழ்ச்சியாக மணக்கச் செய்தார். இராமனும் சீதையும் அயோத்தியில் 20 ஆண்டுக் காலம் இனிய இல்லறம் நடத்தினார்கள். அந்த நெடிய இடைவெளியிலேயே சீதை அரக்கர் குலத்தைச் சேர்ந்தவள் என்ற பேருண்மை கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இராமன் அரக்கர் குலத்தைச் சேர்ந்த சீதையை மறக்கவோ துறக்கவோ தயாராக இல்லை. அதே நேரத்தில் அரக்கர் குலத்தைச் சேர்ந்த சீதை கருவுற்று விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் அயோத்தி அரச குடும்பத்தைப் பற்றிக் கொண்டது. எனவேதான், இந்த அரச குடும்பத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து தசரதனைப் பலி கொடுத்தாலும் பாதகமில்லை என்று துணிந்து இராமனையும், சீதையையும் மரவுரி அணிந்து துறவிகளாகி 14 ஆண்டு காலம் புண்ணியத்

துறைகளில் நீராடி அருளூறு திருத்தலங்களை வழிபட்டு நாடு திரும்ப ஆணையிட்டார்கள் என்று மிகத் தெளிவான செய்தி இருக்கிறது.

(11) இராவணன் சீதையை இலங்கைக்கு அழைத்துச் சென்று அசோக வனத்தில் 18 மாதங்கள் தங்க வைத்த பின்பே இராமன் வானரப் படையோடு இலங்கைக்கு வந்தான். இராமன் இராவணனோடு 18 மாதங்கள் போர் புரிந்தே சீதையை மீட்டான். இப்படியாகச் சீதை இலங்கையில் இராமனைப் பிரிந்து 36 மாதங்கள் தனித்திருந்தாள் என்ற செய்தி தெளிவாக விளக்கப் படுகிறது. ஆக, இராமன் தன்னுடைய 50வது வயதில் அயோத்தி திரும்பி முடிசூட்டிக் கொண்டான். அப்பொழுது சீதைக்கு 66 வயது.

தீக்குளித்து வந்தாலும் அரக்கர் குலத்தின் பதிலியாக அயோத்தி அரசகுலத்தில் வேரூன்றி நிலைத்து விட வேண்டும் என விரும்பியதாலும்; 14 ஆண்டு கால வனவாசத்தில் துறவற வாழ்க்கையில் பிரிந்திருந்ததாலும்; இராமனோடு இனிய இல்லறம் நடத்தி விரைவில் கருவுற்றாள். அவள் அயோத்தி வந்த மூன்று (3) மாதத்துக்குள் கருவுற்று விட்டாள் என்ற செய்தி அயோத்தி அரச குடும்பத்தையே கதி கலங்க வைத்தது. அதனால்தான் வசிட்டர் உட்பட அனைவரும் ஒன்று சேர்ந்து இராமன் வாயாலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டு இலக்குவனே சீதையைக் கொலை செய்யக் கூடிய ஒரு நிலையை உருவாக்கினார்கள்.

ஆனால், விசுவாமித்திரரோ இலக்குவனைத் தனியாகச் சந்தித்து அறநெறியை உணர்த்தியும், சூர்ப்பனகை திரிசடையால் ஆபத்து வரும் என்று அச்சுறுத்தியும், கருவுற்ற சீதையைக் கொல்வது பாவம் என்று விளக்கியும், இலக்குவனின் கொலை முயற்சியை முறியடித்தார். இதே விசுவாமித்திரர் கருவுற்ற சீதை தன்னுடைய தாய்தந்தை, உடன் பிறந்தார் முதலியோரின் அழிவை எண்ணியும்;

தன்னுடைய கணவனே தன்னைக் கொலை செய்ய ஆணையிட்டதை நினைத்தும்; தற்கொலை செய்து கொள்ள நேரிடுமோ என்று அஞ்சி ஓடிவந்து அவளைத் தடுத்தார்.

அவளிடம், அவளுடைய தாயும் தந்தையும் இறக்கும் போது; 'அவள் வயிற்றில் பிறக்கப் போகும் வாரிசுதான் சூரியகுல அரியணையில் அமர்ந்து அரசாட்சி செய்ய வேண்டும்' என்று வெளியிட்ட விருப்பத்தை நினைவுபடுத்தினர். மேலும், சீதைக்கு அவளுடைய வயிற்றில் வளரும் வாரிசை அவளுடைய தற்கொலையின் மூலம் அழிப்பதற்கு உரிமையில்லை என்று வாதாடினர். இவற்றிற்கெல்லாம் மேலாக, 'அவள் அயோத்தி அரச குடும்பத்தாரை அரக்க குலத்தைச் சேர்ந்த தன்னுடைய வயிற்றில் தோன்றப் போகும் வாரிசு அடக்கி ஆளும்படிச் செய்தால்தான்; அவளுடைய வாழ்க்கை முழுமை பெறும்' என்று எடுத்துக் கூறினர்.

இந்த இடத்தில் விசுவாமித்திரர் அகலிகையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்த அரிய செய்தி, சித்தர் இராமாயணத்தில் மட்டுமில்லாமல் வேறு சில இராமாயணங்களிலும் குறிக்கப்படுகிறது. அதாவது '<u>கல்லாகக் கிடந்த அகலிகை இராமனின் கால் பட்டுத்தான் மீண்டும் பெண்வடிவம் பெற்றாள் என்றாலும், இராமன் சீதையை நெருப்பில் மூழ்கி வருமாறு ஆணையிட்டதைக் கேட்டுப் பெண்ணினத்தையே இழிவுபடுத்தும் இந்த இராமனின் கால்பட்டுத் தான் பெற்ற பெண் வடிவை விடுத்து மீண்டும் கல்லாகவே மாறி விட்டாள்</u>' என்ற நிகழ்ச்சியைச் சீதையிடம் அழகுபட விளக்கியுரைத்துத்தான், விசுவாமித்திரர் 'அவள் வயிற்றில் வளர்ந்த இராமனின் வாரிசை அழித்து விடாமல், அந்த வாரிசைக் கொண்டே இராமனுக்கும், மற்ற அயோத்தி அரச குடும்பத்தார்க்கும் பாடம் புகட்ட வேண்டும்' என்ற வெறியுணர்ச்சியை வளர்த்தார்.

இவரே, விரைந்து ஆள் மூலம் இலங்கைக்குச் செய்தியனுப்பித் திரிசடையும், சூர்ப்பனகையும் தங்களுடைய குலச் செல்வி சீதையைத் தேடி அயோத்தி மாநகருக்கு வருமாறு செய்தார். சீதையைத் தேடி வந்த சூர்ப்பனகையும், திரிசடையும் சீதைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், பாதுகாப்புகளையும் தரச் செய்தார்.

மேலும், சீதைக்குப் பிறந்த இலவகுசர்கள் எனும் இரண்டு சிறுவர்களையும் 9 வயதுக்குள் அரக்கர் குலத்துக்குரிய அனைத்து விதமான மாயப் போர்களைச் சூர்ப்பனகை மூலமும், திரிசடை மூலமும் கற்றுக் கொள்ளச் செய்தார். இதேபோல, அரச குலத்துக்குத் தேவையான ஏட்டறிவையும், பட்டறிவையும், போர்ப் பயிற்சிகளையும் வால்மீகி மூலமும், யக்ஞுவல்லி மூலமும், தன் மூலமும் கற்றுக் கொள்ளச் செய்தார்.

இதற்கிடையில், இலவகுசர்களைப் பலமுறை இலங்கைக்குச் சென்று வரச் செய்தார். இலங்கையிலிருந்த அரக்கர் குல இளைஞர்களையெல்லாம், இலவகுசர்களுக்கு ஆதரவாகப் போரிடக் கூடியவர்களாக அயோத்தியைச் சுற்றியுள்ள காடுகளில் கொண்டு வந்து தங்கச் செய்தார்.

அவரே, அயோத்தி அரச குடும்பத்தாருடன் தொடர்ந்து 48 மாதங்கள் போரிட்டு ஒவ்வொருவராகக் கொன்று இறுதியில் இராம இலக்குவனர்களையும் சரயு நதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளும்படிச் செய்யுமாறு செய்தார். அதாவது, இராமனும் இலக்குவனும் தற்கொலை செய்து கொள்ளும் போது அவர்களுக்கு வயது 64. அதாவது, இலவ குசர்கள் தங்களுடைய பத்தாவது வயதில் இலங்கையிலிருந்து வந்த அரக்கர்களின் படையின் துணையோடு திரிசடையையும், சூர்ப்பனகையையும் மாயப் போர்களுக்குத் தலைவர்களாக நியமித்து; அயோத்தி அரசின் மீது போர் தொடுத்தார்கள். திடீர்திடீரென்று அயோத்தி நகரையும்,

சுற்றுப்புறங்களையும், அரண்மனையையும் தாக்கிப் பகுதி பகுதியாக அழித்தொழித்தார்கள்.

அதாவது, நேரடியான போரில் ஈடுபட்டால்; இராமன் தங்களுடைய தாத்தாவான இராவணேசுவரனையும், அவனது சேனையையும் சூழ்ச்சியாக அழித்தது போல், தங்களையும் அழித்து விடுவான் என்று எண்ணி ஆரம்பத்திலிருந்து இறுதி வரையில் மறைந்திருந்தே திடீர் திடீரென்று வெவ்வேறிடங்களில் தாக்குதல் நிகழ்த்தி பெரிய அழிவுகளை உண்டாக்கி விட்டுக் காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொள்ளும் அசுரரின் [தேவலோகத்தில் வாழும் அரக்கர்கள்] போர்முறையைக் கையாண்டார்கள். [இன்றைக்கு இந்தப் போர் முறை 'கொரில்லாப் போர்முறை' என்று குறிக்கப் படுகிறது].

இப்படிச் சிறுகச் சிறுக அயோத்தி அரசின் வளத்தையும், வலிமையையும், அரசகுடும்பத்தார்களையும், அவர்களின் செல்வத்தையும், செல்வாக்கையும் சிதைத்துச் சீரழித்ததன் மூலமே, இலவ குசர்கள்; இராமனையும், இலக்குவனையும் தனிமைப்படுத்தி இக்கடைசிப் போரில் முழுமையாகத் தோற்கடிக்க முடிந்தது. ஆனால், இலவ குசர்கள் இராமனையும், இலக்குவனையும் உயிரோடு கைதிகளாகச் சிறைப் பிடித்துக் கொண்டு வருவதாகத் தங்களின் தாய் சீதைக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

இராம இலக்குவனர்களின் தற்கொலை கேட்டு, அதிர்ச்சியடைந்த **80 வயதான சீதை** தன் மக்களை வால்மீகியிடமும், யக்ஞவல்லியிடமும், திரிசடையிடமும், சூர்ப்பனகையிடமும் ஒப்படைத்து விட்டுத் தனது சிறிய தந்தை வீடணனின் கால்களைத் தொட்டு வணங்கி விட்டுத் தன்னுடைய கற்பின் வலிமையினால் நிலத்தை இரண்டாகப் பிளக்கச் செய்து, அதற்குள் இறங்கி மறைந்து நிறைந்தாள். சீதை நிலத்துள் மறைந்த இடம் இன்றைக்கும் அயோத்திக்கு அருகில் இருக்கிறது.

சீதை மிகச் சிறந்த கற்புக்கரசியாக வாழ்ந்த காரணத்திஞல்தான், அவளும், அவள் கணவன் இராமனும், அவளுடைய தாய் தந்தையரான வண்டமர்குழலியும், இராவணனும், தம்பி மேகநாதனும், சித்தப்பா கும்பகன்னனும், அவளீன்ற மகன்களான இலவ குசர்களும் வாழ்ந்த வாழ்க்கை இராமாயணக் காப்பியமாக, இதிகாசமாக, கீதையாக நிலையாக வடிவம் பெற்றது.

//உண்மை நகல்//

**//இதன் மூலநகல்: கண்டனூர் சித்தரடியான் திரு இராம.நெல்லியான் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

## <u>எங்களுக்குத் தெரியும்! உங்களுக்கு?!?!</u>

1) கொரில்லாப் போர் (Gorilla Warfare)
=> கோரில்லாப் போர்,
=> கோரிக்கை இல்லாப் போர்;
முதன்முதலில் அறிமுகமானது இராமாயணத்தில்.

2) சீதைக்கு இரட்டைக் குழந்தை பிறந்தது; இரண்டாவதாகப் பிறந்த குசனுக்கு உயிரோட்டம் குறைவு. அவனைக் காப்பாற்ற வால்மீகி தருப்பைப் புல்லைக் கவசமாக செய்வித்தார். (இன்று குறைமாதக் குழந்தையைக் காப்பாற்ற கண்ணாடிக் கூண்டு பயன்படுத்தப் படுகின்றது.)

3) இராமாயணம்:- விசுவாமித்திரரின் சூழ்ச்சி.
<u>மகாபாரதம்</u>:- கர்ணன்-குந்தி தேவி => மகன்-தாய்; கடைசி வரை (கண்ணனைத் தவிர) யாருக்கும் தெரியவில்லை.
<u>இராமாயணம்</u>:- இராவணன்-சீதை => தந்தை-மகள்; கடைசி வரை யாருக்கும் தெரியவில்லை.

**//ஆதாரம்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் குறிப்பேடு.//.**

# சித்தர் இராமாயணம் - சிறப்புக் குறிப்பு

சித்தர் இராமாயணத்தில் 'இராம**ண்**' என்று 'ட'ண்ணகரம் 'ற'ன்னகரத்துக்குப் பதில் குறிக்கப்படுகிறது. **இர**விகுலம் இம்**மண்**ணுலகில் நிலைத்த புகழைப் பெறுமாறு பிறந்த ஓகம், ஓகி, யோகி ..... என்று இராமணின் பிறப்பியல் (சாதகம்) கணிக்கப்பட்டே இப்பெயர் வைக்கப் பட்டது.

அயோத்தி மன்னர்களிலேயே இரதம் ஓட்டுவதில் வல்லவன் 'அயரதன்' = தயரதன் என்று பெயர் பெற்றான். இவனுடைய இயற்பெயர் 'அறவோன்' என்பதேயாகும்.

இரண்டாவது உகமான திரேதாயுகத்தில் 'இரதம்' ஓட்டுவது மிகச் சிறப்புக்கும், பெருமைக்கும், போட்டிக்கும் உரியதாக கருதப்பட்டது. மன்னர்கள் இரதம் ஓட்டுவதில் பெற்ற வல்லமையைக் கொண்டே பெயர்கள் வைக்கப்பட்டன. அயோத்தி மன்னன் பத்துவகையான தேர்களை ஓட்டிடும் வல்லவன் என்பதால் 'பத்துரதன்' என்று பெயர் பெற்றான்; இலங்கை மன்னன் 'இலங்கேசன்', இலங்கேசுவரன் எனக் குறிக்கப்படுபவன் தன் எண்ணப்படி எந்த வகையான இரதத்தையும் ஓட்டும் கைவண்ணம் பெற்றிருந்தான் என்பதால் 'இரத + வண்ணன் = இராவணன்' எனப் பெயர் பெற்றான்.

**//குருதேவர் அறிக்கை 9இலிருந்து எடுக்கப் பட்டது.//**

***[சித்தர் இராமாயணக் கட்டுரைகள் தொடரும்.....]***

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த ‘குமரிக்கண்டம்’.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குரு பாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். இவர் இலைமறை காயாகவே சித்தர் இராமாயணத்தை வளர்க்கவும், வாழ்வு பெறவும் செய்திட்டார். ஆனால், பிறமண்ணினரான பிருமணர்கள் என்னும் வடஆரியர்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு சித்தர் இராமாயணம் செல்வாக்குப் பெற முடியாமல் செய்து விட்டார்கள்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**Email: indhuism@gmail.com**

www.induism.org www.books.gurudevar.org